மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 105/2022**

2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதி புதன்கிழமை

பி.வா.சா.1 ( நாகம்மாள் )

கு.வி ( வாதிகள் தரப்பில்)

1ம் வாதி ஜானகி எனது மூத்த சகோதரரின் மனைவி என்றால் சரிதான். கருப்பசாமி, சமுத்திரம், மணிகண்டன், செல்வி, ஆறுமுகம், பஞ்சராஜா ஆகியோர் எனது சகோதரரின் மகன்கள் என்றால் சரிதான். அழகர், நான், நாகம்மாள், அழகச்சி, கருப்பசாமி, அய்யம்மா ஆகியோர் உடன்பிறந்தோர் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி மூக்காயி எனது மகள் என்றால் சரிதான். எனது பெற்றோருக்கு ஊரில் பொதுச்சொத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல. மேலராங்கியம், அம்பலத்தடி, விருதுநகர் மாவட்டதில் உள்ள பூம்பிடாகை ஆகிய இடங்களில் பொதுபாத்திய சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா சொத்து, அம்மா சொத்து அனைத்து சொத்துக்களும் பொதுப்பாத்தியத்தில் தான் உள்ளது என்றால் இல்லை, எனது தாயார் அவருக்கு பாத்தியமான சொத்தை எனக்கு எழுதிகொடுத்துள்ளார். எனது அப்பாவின் சொத்துக்களை எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை. எனது அம்மாவின் தகப்பனார் மூக்கானம்பலத்திற்கு ராக்கம்மாள் மற்றும் மருதாயி ஆகியோர் பிள்ளைகள் என்று சொன்னால் சரிதான். ஆண்பிள்ளைகள் மூக்கானம்பலத்திற்கு இல்லை என்றால் சரிதான். மூக்கானம்பலத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ராக்கம்மாள் வழியில் வந்து எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மருதாயி வேறு இடத்தில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டு அவர் தனது கணவருடன் வாழாமல் பெற்றோர் வீட்டுக்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி மருதாயி எனது தகப்பனார் பாதுகாப்பில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. மருதாயிக்கு பாத்தியப்பட்ட சொத்தை எனது தம்பி அழகச்சி, கருப்பசாமி ஆகியோருக்கு தனமாக எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல, எனக்கு தெரியாது. தந்தை வழி மூலம் ராக்கம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை 22.11.1989ந் தேதி தானசெட்டில்மெண்ட் மூலம் நாகம்மாளுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, எனது தாயாரின் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து. மேற்படி

தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சா்வே எண்.194/7, 135/5 பாத்தியப்பட்ட சொத்துக்கள் தகப்பனார் மார்க்கண்டேயன் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது, எனது அம்மா சொத்து தான் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது. எனது அம்மா எனக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை பொறுத்து எனது தம்பி கருப்பசாமி, அழகச்சி எதுவும் பிரச்சனை செய்தார்களா என்றால் இல்லை. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் என்னால் எனது தயாரிடம் இருந்து மோசடியாக பெறப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை ரத்து செய்யசொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை